**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்- 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107(5) ஆவது உப பிரிவு மற்றும் 18 ஆவது பிரிவின்கீழ் கையளிக்கப்பட்டுள்ள 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவக ஒழுங்குவிதிகளில் 17 ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தில் 108(1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்களைத் தவிர்ந்து, நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்கும் போது அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகள் ஏற்படும் ஆபத்துகளை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டது. தவறாக காண்பிப்பதால் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுகளினால் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி காரணமாக ஏற்படும் தாக்கம் அதிகமாயின் அவற்றை கூட்டுத் சதியின ஊடாக, போலியான ஆவணங்களை தயாரிப்பதன் மூலம், வேண்டுமென்றே விட்டு விடுதல் போன்ற காரணங்களால் ஆகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்துடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படாதென்ற போதிலும் நிறுவனத்தின் வெளிவாரி பாடநெறிகள் மற்றும் செயற்திட்டங்களிலிருந்து ஈட்டப்பட்ட ரூபா 293,954,234 கூட்டுத்தொகையான மொத்த வருமானத்தில் ரூபா 165,031,257 கூட்டுத்தொகையான மொத்த செலவினம் ஈடுசெய்யப்பட்டு ரூபா 128,922,977 ஆன தேறிய வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் தேறிய வருமானம் காண்பிக்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பு இலக்கம் 20 இற்குரிய தகவல்களின் கீழ விரிவான வருமானம் மற்றும் செலவினங்கள் அந்தந்த வருமான ஈட்ட அலகுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் கழிவுப்பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலத்தை குறைத்து அனைத்து வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதித் திகதியிலும் மீளாய்வு செய்யாத காரணத்தால் ரூபா 6,913,358 கிரயமான வாசிகசாலை புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதற்கமைய | மீள்மதிப்பீடு செய்தல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நிலவும் புத்தகங்களின் அளவு (9000 இற்கு அதிகமான) கருத்திற் கொண்டு ஒவ்வொரு புத்தகத்தினையும் மீள் மதிப்பீடு செய்வதற்கு கருததில் கொள்ளக் கூடிய அளவிலான காலம் கடக்கின்றமையால் கணக்கு கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பம் வரையிலும் இப்பணியை நிறைவு செய்ய முடியாதிருந்தது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) மீளாய்வாண்டினுள் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருந்த ரூபா 8,788,468 ஆன செயற்திட்ட நன்கொடைகள் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் இனங்காணுதல் மற்றும் அளவிடுதல் இடம்பெற்றிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 01 முதல் 07 வரையான பழைமையான ரூபா 1,229,330 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 709,390.00 ஆனது நீதிமன்ற பணிகளுக்குரியதாக சேவை வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய பணமாகும்.<br><br>2021 ஆம் ஆண்டில் அரச உத்தியோகத்தர்களினதும் குறித்த நீதிமன்றங்களின் நிலுவை மீதிகளிலிருந்தும் அறவிடுவதற்கு CDF பதவியணியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பணத்தை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

---

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | வெளிநாட்டு உதவிகள் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்த 04 செயற்திட்டங்களுக்காக 2018, 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 26,399,881 கூட்டுத்தொகையான வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிறுவனம் மற்றும் அதன் கல்விசார் பதவியணி சர்வதேச ரீதியில் ஆராய்ச்சி முன்மொழிவுகளை சமர்ப்பித்து ஆராய்ச்சி நிதி நன்கொடைகளை பெற்றுக் கொள்வதற்கு சிரத்தையுடன் நடவடிக்கை எடுக்கின்றது. அவ்வாறான நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகளுக்கான அங்கீகாரம் கிடைத்த பின்னர் குறித்த நிறுவனம் ஒதுக்கிய ஆராய்ச்சி நிதி நன்கொடைகளை நேரடியாக எமது நிறுவனத்திற்கு வழங்குவடன் திறைசேரியின் ஊடாக அந்த நடவடிக்கைகள் இடம்பெறுவதில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2009 இன் பெப்ரவரி 05 ஆந் திகதிய 2009/2 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை. | இடர்க்கடன் செலுத்தப்பட முடியுமான உச்ச எல்லையினை விஞ்சி 41 உத்தியோகத்தர்களுக்கு மொத்தம் ரூபா 11,305,700 ஆன தொகை இரட் கடனாக மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்ட நிறுவனத்தின் முகாமைத்துவ பதவியணி அங்கீகாரத்துடன் 100% நிறுவனத்தில் ஈட்டப்பட்ட நிதியினை பயன்படுத்தி நடைமுறைப் படுத்தப்படும் விசேட இடர்கடன் முறைமையாகும்.<br><br>எவ்வாறான போதிலும் | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

இக்கடன் முறைமை தொடர்பில் 2020 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினா தொடர்பில் நிறுவனத்தின் கணக்காய்வு குழுவினதும் முகாமைத்துவ சபையினதும் கலந்துரையாடப்பட்டு இந்த விசேட இடர் கடன் முறைமைக்காக உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் வகையிலும் இடைநிறுத்தப் பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 183,370,199 ஆன மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 82,562,613 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 100,807,586 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களுக்கான அரச கொடுப்பனவுகள் அதிகரித்தமை ஆகியன பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக பிணைமுறிகளை கோரிய ஐந்து பேராசிரியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 19,488,865 கூட்டுத்தொகையான பணம் 01 முதல் 17 வருடங்கள் வரையான காலப்பகுதி கடந்திருந்த | ஒரு நபரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்திற்காக கணக்காய்வு குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டு | பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

போதிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

அதற்கமைய மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எஞ்சிய மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை ஓய்வூதிய பணத்திலிருந்து செலுத்துவதற்கு இணங்கியுள்ளது.